செய்தி வெளியீடு எண்: 01/06/2021 **20.06.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் நாளை (21.06.2021) முதல் மீண்டும் தொடங்குகின்றன

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தினால் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 10.05.2021 முதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன. தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் நாளை (21.06.2021) முதல் தொடங்குகின்றன.

தமிழக அரசின் அறிவுறுத்தல்களின்படி கொரோனா வைரஸை கட்டுப்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

**மெட்ரோ இரயில் சேவைகள்:**

- மெட்ரோ இரயில் சேவைகள் தொடக்கத்தில் காலை 06:30 மணி முதல் இரவு 09:00 மணி வரை இயக்கப்படும் .பின்பு தேவையின் அடிப்படையில் நேர மாற்றம் செய்யப்படும்.
- சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் சேவைகளை பின்வரும் நிலைகளில் இயக்கவுள்ளது.
  - ✓ நீலவழித்தடம் - விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையம் இடையே மற்றும்;
  - ✓ பச்சைவழித்தடம் - பரங்கிமலை மெட்ரோ மற்றும் புரட்சித் தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இடையே நாளை (21.06.2021) திங்கள்கிழமை முதல் உச்சநேரங்களில் (Peak Hours) (காலை: 09.00 மணி முதல் காலை 11.00 மணி வரை மற்றும் மாலை: 05.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை) 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் இரயில்கள் இயக்கப்படும்.
- பயணிகளின் பாதுகாப்பிற்காக அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமிநாசனி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது.
- மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியை கண்காணிப்பதற்காக தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- நடைமேடையில் காத்திருக்கும் போதும் இரயிலில் பயணிக்கும் போதும் பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருப்பதுடன் 6 அடிதூர இடைவெளியை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அனைத்து மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த “X” குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்தகுறியீடுகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107